

வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களின் சொந்த ஊரான தி.எடையார் கிராமத்தில் சமத்துவப் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு கழக நாள்காட்டிகள், புடவை , வேட்டி, அறுசுவை உணவு உள்ளிட்ட பொங்கல் பரிசுகளை வழங்கினார். வழியில் பேரங்கியூர், வளையாம் பட்டு, மேலமங்கலம், செம்மார், சிறுவானூர், ஏமப்பூர், திருவெண்ணெய்நல்லூர், சின்னசெவலை, எடையார் ஆகிய ஊராட்சிகளில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

‘சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா’ - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்குப் பாராட்டு!

# பள்ளிக் கல்வித் துறையின் தனித்துவமான இந்த முன்னெடுப்பு - புதிய மைல்கற்களை அடைந்துள்ளது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, ஜன.20–**

**சென்னை பன்னாட்டு புத்தக கத் திருவிழா குறித்து முதல் வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவில், ‘‘தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் இந்தத் தனித்துவமான முன்னெடுப்பு, புதிய மைல் கற்களை அடைந்துள்ளது’’ என்று குறிப்பிட்டுள்ளார்.**



சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா 2025: “உலகைத் தமிழுக்கும், தமிழை உலகுக்கும்” - இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத, தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் தனித்துவமான இந்த முன்னெடுப்பு புதிய மைல் கற்களை அடைந்துள்ளது.

2023-இல் 365 புரிந்துணர்வு ஒப்பந்தங்களுடன் தொடங்கி, 2024-இல் 752 என வளர்ந்து, தற்போது 2025-ஆம் ஆண்டில் 1125 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (தமிழில் இருந்து அயலக மொழிகளுக்கு 1005, அயலக மொழிகளில் இருந்து தமிழுக்கு 120) மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தச் சாதனைக்கும், தமிழிலக்கியம் உலக அளவில் கவனம் பெறவும் நமது திராவிட மாடல் அரசின் மொழிபெயர்ப்பு நல்கையும் ஆதரவும்தான் காரணம் எனத் தமிழ் அறிவுலகம் பாராட்டுகிறது. ஞானபீடம் அல்ல, நம் எழுத்தாளர்கள் நோபல் பரிசே பெற உயர்வுள்ளுவோம்!

இவ்வியத்தகு சாதனைக்காக அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கும் துறை அதிகாரிகளுக்கும் எனது பாராட்டுகள்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பெருநகரங்களை ஒப்பிடுகையில் குற்றங்கள் மிகக்குறைவு!

# சென்னை மாநகரம் பாதுகாப்பான நகரம்!

## ‘தி டைம்ஸ் ஆஃப் இந்தியா’ ஆங்கில நாளிதழ் புள்ளி விவரம்!

மும்பை, ஜன.19–

மும்பை நகரின் பாந்த்ரா பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வரும் பிரபல பாலிவுட் நடிகர் சைஃப் அலிகான் அவர்களை அவரது வீட்டிற்குள் புகுந்து மர்மநபர் ஒருவர் கத்தியால் குத்தியுள்ள சம்பவம் குறித்து ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் அளிக்கப்பட்டுள்ள குற்றச் சம்பவங்கள் குறித்த புள்ளிவிவரங்களில், கொள்ளை, திருட்டு, கடத்தல், பெண்களுக்கு எதிரான குற்றங்களில் நாட்டிலுள்ள பெருநகரங்களை ஒப்பிடுகையில் சென்னை மாநகரத்தில் குற்றங்கள் மிகவும் குறைவு என்று தெரிவித்துள்ளது.

THE TIMES OF INDIA

“சென்னை மாநகரம் நாட்டின் பாதுகாப்பான நகரம்’’ என்பதற்கு இந்த புள்ளிவிவரங்களே சாட்சியாகும்.

**இச்செய்தியானது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு, மாநிலத்தின் சட்டம், ஒழுங்கு, பெண்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வருவதை உறுதி செய்கிறது.**



சிவகங்கை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் முதல்வர் வருகை மற்றும் வரவேற்பு குறித்து நடைபெற்ற நிர்வாகிகள் கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் எம்.ஜெயராமன் பேசினார். உடன் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளனர்.



ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணியின் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்து ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி பெரிய சேமூர் பகுதி 21, 22வது வார்டுகளில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை பொதுமக்களிடம் விளக்கி கூறி வீடு, வீடாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் கழக துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., முன்னாள் அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம், மாவட்ட துணைச் செயலாளர் ஆ.செந்தில்குமார், மேயர் நாகரத்தினம், மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், பகுதி கழக செயலாளர் வி.செல்வராஜ், இமயம் சிவக்குமார், இளமுருகு உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் - துவரவயலில் கழக இளைஞரணி செயலாளர் -

# தமிழ்நாடு துணை முதலமைச்சர் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சமத்துவப் பொங்கல் விழா!

## கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை ஜன.20-

கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டம் துவரவயல் கிராமத்தில் நடைபெற்ற நம்ம ஊர் திருவிழா என்ற சமத்துவ பொங்கல் விழாவில் ஜாதி மத பேதங்களை கடந்து அந்த பகுதி கிராமங்களில் வசிக்கும் மக்கள் ஒரே இடத்தில் சமத்துவ பொங்கல் வைத்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அப்போது அங்கு நடைபெற்ற குதிரை ஆட்டம், சிலம்பாட்டம்,தீப்பந்த சாகச விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகள் காண்போரை மெய்சிலிர்க்க வைக்கும் வகையில் விமர்சையாக நடைபெற்றது. இதில் 5 வயது சிறுவர் அனைவரையும் வியக்க வைக்கும் வகையில் அற்புதமாக சிலம்பம் சுற்றியது பார்வையாளர்களை பரவசப்படுத்தியது.

கழக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் 48 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டம்குண்ணாண்டார் கோயில் ஒன்றியம்.புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட கவுன்சிலர் செல்வம் ஏற்பாட்டில் துவரவயல் கிராமத்தில் திமுக வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ் ரகுபதி தொடங்கி வைத்தார் . நம்ம ஊர் திருவிழா என்ற பெயரில் சமத்துவ பொங்கல் விழா மிக விமர்சையாக நடைபெற்றது.

இதில் அந்தப் பகுதி கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள், மதங்களைக் கடந்தும் ஜாதிகளை மறந்தும் ஒரே இடத்தில் அடுப்புகளை வைத்து பொங்கலிட்டு மகிழ்ச்சியோடு அதை படையலிட்டு சமத்துவ பொங்கல் விழாவை சகோதரத்துவத்துடன் கொண்டாடி மகிழ்ந்தனர். இந்த சமத்துவ பொங்கல் விழாவை முன்னிட்டு அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கிராமிய கலை நிகழ்வுகள் காண்போரை கவர்ந்தது.

இதேபோல் தீப்பந்தம் சுற்றும் விளையாட்டில் அப்பகுதியை சேர்ந்த இளைஞர்கள் தீப்பந்தங்களை சுற்றிய தோடு வட்ட வடிவிலான தீக்குள் பாய்ந்து சென்ற காட்சி காண்பபோரை பரவசப்படுத்தியது.

மதியம் 3 மணிக்கு தொடங்கிய இந்த சமத்துவ பொங்கல் விழா இரவு 10 மணி வரை மிகவும் விமர்சியாகவும் உற்சாகத்தோடும் சமத்துவத்தையும்சகோதரத்துவத்தையும் வெளிப்படுத்தும் வகையில் அனைவரும் வியக்கும் வகையில் கொண்டாடப்பட்டது அக்கிராம மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இறுதியாக கிராம மக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

நிகழ்வில் கழக விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கே.ஆர்.என்.போஸ், கழக மருத்துவரணி துணை செயலாளரும் விராலிமலை சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான டாக்டர் அஞ்சுகம் பூபதி,

மாவட்ட துணைச் செயலாளர் பெ. ராஜேஸ்வரி, ஒன்றிய செயலாளர்கள் என்.சேட்டு, ஓ.எஸ். வெங்கடாசலம், சி.சண்முகம், தவ.பாஞ்சாலன், கே.எஸ்.சந்திரன், வெ. முத்து கிருஷ்ணன், மு. பி.ம. சத்தியசீலன், மா. தமிழ் அய்யா, ஆர்.ஆர். சாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், கீரனூர் நகர செயலாளர் பிஅண்ணாதுரை, டி.செல்வம், எம்.செந்தில்குமார், கை.பழனிச்சாமி,

மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளரும் பட்டுக்கோட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான முனைவர் சி.குறிஞ்சிவாணன், கீரனூர் பேரூராட்சி தலைவர் கே.எம்.கே.ரவிக்குமார், துணை தலைவர் எம்.ஏ.எம்.இம்தியாஸ், மாவட்ட பிரதிநிதி பி.சி. என்.கண்ணன்

மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் வி. என்.எம்.பாலமுருகன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வி.ஜி.ஆர். மணிவண்ணன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் இளைஞரணி மு.கலைஞர் கருணாநிதி, விளாப்பட்டி சிவா, இலக்கிய அணி ஓ.ஆறுமுகம், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் டி.முரளிதரன், எழில் ராஜா, தமிழினியன் உள்ளிட்ட ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள் மற்றும் ஆயிரக்காணக்கான பொதுமக்கள் பங்கேற்று சிறப்பித்தனர்

மற்றும் ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# திருவாரூரின் 4 தொகுதிகளையும் வென்று கழக தலைவரிடம் சமர்ப்பிப்போம்!

## திருவாரூர் மாவட்டக் கூட்டத்தில் கழகத்தினர் உறுதி!

திருவாரூர், ஜன. 20-

திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பூண்டி கே. கலைவாணன் தீர்மானங்களை விளக்கி பேசினார். மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், சாந்திபாஸ்கர், பொருளாளர் மு.வெங்கடேசன் ,தொகுதி தேர்தல் பார்வையாளர்கள் காமராஜ், ராஜா சீனிவாசன், ஜெகவீர பாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன் ஆகியோர் முன்னிலை ஏற்றனர். கூட்டத்தில் பேசிய அனைவரும் திருவாரூர் மாவட்டத்தின் சார்பில் திருவாரூர் ,மன்னார்குடி , நன்னிலம் ,திருத்துறைப்பூண்டி உள்ளிட்ட நான்கு தொகுதிகளையும் வென்று கழக தலைவர் திராவிட நாயகர் தளபதி அவர்களிடம் சமர்ப்பிப்போம் அதற்கான தேர்தல் பணிகளை மேற்கொள்வோம் என் உறுதி ஏற்றனர்

கூட்டத்தில் முதுபெரும் தமிழறிஞர்களின் எண்ணங்களின்படி மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கும் தை முதல்நாள் தமிழ் புத்தாண்டு மற்றும் தைப் பொங்கல் விழாவினை திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாவட்டம் முழுவதும் கழக கொடி ஏற்றி இனிப்புக்கள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது , தலைமை கழக அறிவுறுத்தலுன்படி நான்கு தொகுதிகளுக்குட்பட்ட வாக்குசாவடிகளுக்கும் பூத்கமிட்டி உறுப்பினர்களின் விபரங்களை சரிபார்த்து உடனடியாக சமர்ப்பிப்பது உள்ளிட்ட தீர்மானங்களும் , மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் உள்ளிட்டோருக்கு இரங்கலும் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் பங்கேற்றனர். நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் நன்றி கூறினார்.



சிவகங்கையில் முதல்வர் வருகை குறித்து நடைபெற்ற சிவகங்கை நகரக் கழக நிர்வாகிகள் கூட்டத்தில் நகர் கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த் பேசினார். உடன் நகர் கழக நிர்வாகிகள் உள்ளார்கள்.